www.Padasalai.Net www.CBSEtips.in

No. of Printed Pages : 11

627769

+1

**7147**

பதிவு எண்
Register Number J U N 2 0 2 3

# PART - III

# பொருளியல் / ECONOMICS

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version)

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

Time Allowed : 3.00 Hours ] [ Maximum Marks : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

## பகுதி - I / PART – I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[ திருப்புக / Turn over

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



1. சமநிலை விலை என்பது அந்த விலையில் :

(அ) எல்லாம் விற்கப்படுகிறது

(ஆ) வாங்குபவர்கள் பணத்தை செலவிடுகின்றனர்.

(இ) தேவையின் அளவும் அளிப்பின் அளவும் சமம்

(ஈ) மிகைத் தேவை பூஜ்ஜியம்

The equilibrium price is the price at which :

(a) Everything is sold

(b) Buyers spend their money

(c) Quantity demanded equals quantity supplied

(d) Excess demand is zero

2. பொருந்தாத ஒன்றைத் தெரிவு செய்க :

(அ) ஆடம்பரப் பண்டங்கள் (ஆ) வசதிப் பண்டங்கள்

(இ) அத்தியாவசியப் பண்டங்கள் (ஈ) விவசாயப் பொருட்கள்

Pick the odd one out :

(a) Luxuries (b) Comforts

(c) Necessaries (d) Agricultural goods

3. பொருளாதாரத்தில் நாம் படிக்கும் அடிப்படைப் பிரச்சினை.

(அ) எண்ணற்ற விருப்பங்கள்

(ஆ) அளவற்ற வளங்கள்

(இ) பற்றாக்குறை

(ஈ) நம் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான உத்தி

The basic problem studied in Economics is :

(a) Unlimited wants

(b) Unlimited means

(c) Scarcity

(d) Strategy to meet all our wants

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



4. நுகர்வோர் எச்சம் என்ற கருத்துடன் தொடர்புடையவர் :

(அ) ஆடம் ஸ்மித் (ஆ) மார்ஷல் (இ) ராபின்ஸ் (ஈ) ரிக்கார்டோ

The concept of consumer's surplus is associated with :

(a) Adam Smith (b) Marshall (c) Robbins (d) Ricardo

5. எந்தக் காரணி சமுதாய மாற்றம் உருவாக்கும் முகவர் என்று அழைக்கப்படுகிறது?

(அ) உழைப்பாளர் (ஆ) நிலம்

(இ) தொழிலமைப்போர் (ஈ) மூலதனம்

Which factor is called the changing agent of the society ?

(a) Labourer (b) Land

(c) Organizer (d) Capital

6. செலவு சார்புகள், _________ சார்புகள் எனவும் அழைக்கப்படுகிறது.

(அ) உற்பத்தி (ஆ) முதலீடு (இ) தேவை (ஈ) நுகர்வு

Cost functions are also known as _________ function.

(a) production (b) investment (c) demand (d) consumption

7. ஓர் அலகு கூடுதலாக உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவு.

(அ) மாறும் செலவு (ஆ) மாறாச் செலவு

(இ) இறுதி நிலைச் செலவு (ஈ) மொத்தச் செலவு

The cost incurred by producing one more unit of output is _________.

(a) variable cost (b) fixed cost

(c) marginal cost (d) total cost

8. முற்றுரிமையில் MR வளைகோடு _________ வளைகோட்டிற்கு கீழிருக்கும்.

(அ) TR (ஆ) MC (இ) AR (ஈ) AC

In monopoly, MR curve lies below _________ curve.

(a) TR (b) MC (c) AR (d) AC



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



9. பொருளியலில் வருமானப் பகிர்வு என்பது ________ உடன் தொடர்புடையது.

(அ) உற்பத்திக் காரணிகள் (ஆ) தனிநபர்

(இ) நிறுவனங்கள் (ஈ) வணிகர்கள்

In Economics, distribution of income is related to ________.

(a) factors of production (b) individual

(c) firms (d) traders

10. ________ ஐ பயன்படுத்துவதற்கான வெகுமதியே வாரம் ஆகும்.

(அ) மூலதனம் (ஆ) உழைப்பாளி (இ) நிலம் (ஈ) அமைப்பு

Rent is the reward for the use of ________.

(a) capital (b) labour (c) land (d) organization

11. கர்நாடகத்தின் முக்கிய தங்கச் சுரங்கப்பகுதி ________

(அ) கோலார் (ஆ) இராமகிரி (இ) அனந்தபூர் (ஈ) குல்பர்ஹா

The main gold mine region in Karnataka is ________.

(a) Kolar (b) Ramagiri (c) Anantpur (d) Gulbarga

12. இரயத்துவாரி முறை முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட இடம் :

(அ) கேரளா (ஆ) வங்காளம் (இ) தமிழ்நாடு (ஈ) மகாராஷ்டிரா

Ryotwari System was initially introduced in :

(a) Kerala (b) Bengal (c) Tamil Nadu (d) Maharashtra

13. பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம் ________

(அ) 1992 - 1997 (ஆ) 2002 - 2007 (இ) 2007 - 2012 (ஈ) 1997 - 2002

Tenth Five Year Plan period was ________.

(a) 1992 - 1997 (b) 2002 - 2007 (c) 2007 - 2012 (d) 1997 - 2002

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**14.** ஊரக பொருளாதாரத்தின் முக்கிய இயல்பு :

(அ) வேளாண்மையைச் சார்ந்திருத்தல்

(ஆ) அதிக மக்கள் தொகை அடர்த்தி

(இ) குறைந்த அளவு மக்கள் தொகை

(ஈ) ஏற்றத்தாழ்வு குறைவு

The important feature of rural economy is :

(a) dependence on agriculture

(b) high population density

(c) low level of population

(d) low level of inequality

**15.** ஊரகத் தொழிற்சாலைக்கான உதாரணம்.

(அ) சர்க்கரை ஆலைத் தொழில் (ஆ) பாய் தயாரிக்கும் தொழில்

(இ) சிமெண்ட் தொழில் (ஈ) காகிதத் தொழில்

The example for rural industry is :

(a) Sugar factory (b) Mat making industry

(c) Cement industry (d) Paper industry

**16.** கீழ்க்கண்டவற்றுள் தவறான இணை எது?

(அ) தமிழ்நாட்டின் நுழைவாயில் - தூத்துக்குடி

(ஆ) வீட்டு ஜவுளி தயாரிப்பு - ஈரோடு

(இ) எஃகு நகரம் - சேலம்

(ஈ) பம்ப் நகரம் - கோயம்புத்தூர்

Which of the following is wrongly matched ?

(a) Gateway of Tamil Nadu - Thoothukudi

(b) Home textile city - Erode

(c) Steel city - Salem

(d) Pump city - Coimbatore

[ திருப்புக / Turn over

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



17. குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான முதலீட்டில் தமிழ்நாட்டின் தரம் :

(அ) I (ஆ) II (இ) III (ஈ) IV

In investment proposals filed by MSMEs, the rank of Tamil Nadu is :

(a) I (b) II (c) III (d) IV

18. கீழ்க்கண்டவற்றுள் எது நிலத்தின் சிறப்பியல்பு அல்ல?

(அ) குறை அளிப்பு (ஆ) இயங்கும் தன்மையுடையது

(இ) பல வகைப்படும் (ஈ) இயற்கையின் கொடை

Which of the following is not a characteristic of land ?

(a) Its limited supply (b) It is mobile

(c) Heterogeneous (d) Gift of nature

19. ________ இவற்றின் ஒருங்கிணைப்பே கணிதவியல் பொருளாதாரம் எனப்படும்.

(அ) கணிதம் மற்றும் பொருளாதாரம்

(ஆ) பொருளாதாரம் மற்றும் புள்ளியியல்

(இ) பொருளாதாரம் மற்றும் சமன்பாடுகள்

(ஈ) வரைபடங்கள் மற்றும் பொருளாதாரம்

Mathematical Economics is the integration of ________.

(a) Mathematics and Economics (b) Economics and Statistics

(c) Economics and Equations (d) Graphs and Economics

20. பண்டங்கள் மற்றும் பணிகள் வரி சட்டம் அமல்படுத்தப்பட்ட நாள் ________

(அ) 2017, ஜூலை 1 ந்தேதி (ஆ) 2016, ஜூலை 1 ந்தேதி

(இ) 2017, ஜனவரி 1 ந்தேதி (ஈ) 2016, ஜனவரி 1 ந்தேதி

The Goods and Services Tax Act came into effect on ________.

(a) 1st July 2017 (b) 1st July 2016

(c) 1st January 2017 (d) 1st January 2016

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - II / PART - II

குறிப்பு : எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30 -க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 7x2=14

**Note :** Answer **any seven** questions. Q. No. **30** is **Compulsory.**

**21.** பண்டங்கள் என்றால் என்ன?

What are goods ?

**22.** விருப்பங்களை வகைப்படுத்துக.

Mention the classifications of wants.

**23.** வருவாயை வரையறுக்கவும்.

Define "Revenue".

**24.** நீர்மை விருப்பத்தின் பொருளைக் கூறுக.

State the meaning of liquidity preference.

**25.** முதலீட்டை திரும்பப் பெறுதல் - வரையறுக்கவும்.

Define disinvestment.

**26.** குறுங்கடன் என்றால் என்ன?

What is Micro finance ?

**27.** தமிழ்நாட்டின் முக்கியத் துறைமுகங்கள் யாவை?

What are the Major ports in Tamil Nadu ?

**28.** இயற்கை வளங்களைப் பற்றி சிறுகுறிப்பு வரைக.

Write a short note on natural resources.

[ திருப்புக / Turn over

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



29. ஊரக மின்மயமாக்கல் - வரையறுக்கவும்.

Define Rural Electrification.

30. தமிழ்நாட்டிற்கேற்ற நான்கு உணவுப் பயிர்களைக் குறிப்பிடுக.

Mention any four food crops which are favourable to Tamil Nadu.

## பகுதி - III / PART – III

குறிப்பு : **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

**Note :** Answer **any seven** questions. Q. No. **40** is **Compulsory**.

31. பணிகளின் பல்வேறு இயல்புகள் யாவை?

What are the different features of services ?

32. சமநோக்கு வளைகோடுகளின் பண்புகள் யாவை?

What are the properties of indifference curves ?

33. உற்பத்தியாளர் சமநிலையை உதாரணத்துடன் விளக்குக.

Illustrate the concept of Producer's Equilibrium.

34. தமிழ்நாட்டின் ஜவுளித்துறை முன்னேற்றம் பற்றி விவரிக்கவும்.

Describe the development of textile industry in Tamil Nadu.

35. நிறைவுப் போட்டி மற்றும் முற்றுரிமை போட்டியின் ஒற்றுமையைக் குறிப்பிடுக.

Mention the similarities between perfect competition and monopolistic competition.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



36. கூலியின் பல்வேறு வகைகளைப் பட்டியலிடுக.

List out the different kinds of wages.

37. PQLI என்றால் என்ன?

What is PQLI ?

38. குளிர்பதன சேமிப்புக் கிடங்கு பற்றி குறிப்பு எழுதுக.

Give a short note on cold storage.

39. கணித முறையின் பொருளாதாரப் பயன்பாடுகளை விளக்குக.

Illustrate the uses of Mathematical Methods in Economics.

40. ஊரக வேலையின்மையை நீக்குவதற்கான வழிமுறைகள் யாவை?

What are the remedial measures for rural unemployment ?

## பகுதி – IV / PART – IV

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

**Note :** Answer **all** the questions.

41. (அ) நுண்ணியல் மற்றும் பேரியல் பொருளியலுக்கு இடையேயான வேறுபாடுகளைக் கூறுக.

**அல்லது**

(ஆ) இந்தியக் கனிம வளங்களின் முக்கியத்துவத்தை விவரிக்கவும்.

(a) State the differences between micro economics and macro economics.

**OR**

(b) Explain the importance of mineral resources in India.

[ திருப்புக / Turn over

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**42.** (அ) தேவை நெகிழ்ச்சியை அளவிடும் முறைகள் யாவை?

**அல்லது**

(ஆ) ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்திய பொருளாதாரம் பற்றி விவாதிக்கவும்.

(a) What are the methods of measuring Elasticity of demand ?

**OR**

(b) Discuss about the Indian economy during British period.

**43.** (அ) அகச்சிக்கனங்கள் மற்றும் புறச்சிக்கனங்களை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) 2015-2020 ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதி-இறக்குமதி கொள்கையின் சிறப்பியல்புகளை விளக்குக.

(a) Explain the internal and external economies of scale.

**OR**

(b) Describe the salient features of EXIM Policy (2015-2020).

**44.** (அ) குறுகிய காலச் செலவுக் கோடுகளை தகுந்த படத்துடன் விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) ஊரகக் கடன்களுக்கான காரணங்களை ஆராய்க.

(a) Explain the short run cost curves with suitable diagram.

**OR**

(b) Analyse the causes for Rural Indebtedness.

**45.** (அ) சில்லோர் முற்றுரிமையின் பண்புகளை விளக்குக.

**அல்லது**

(ஆ) மக்கள் தொகையின் தரமான அம்சங்களை விவரிக்கவும்.

(a) Describe the features of oligopoly.

**OR**

(b) Describe the qualitative aspects of population.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**46.** (அ) ரிக்கார்டோவின் வாரக் கோட்பாட்டை எடுத்துக்காட்டுடன் விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) பி.ஆர். அம்பேத்கர் பன்முகத்திறன் கொண்டவர் - நிரூபிக்கவும்.

(a) Illustrate the Ricardian Theory of Rent with example.

**OR**

(b) Dr. B.R. Ambedkar was a versatile personality - Prove.

**47.** (அ) வணிக வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதன் நோக்கங்களை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) பொருளாதார முன்னேற்ற கருத்துகளில் ஜவஹர்லால் நேருவின் பங்கை வெளிக் கொணர்க.

(a) Explain the objectives of nationalization of commercial banks.

**OR**

(b) Bring out Jawaharlal Nehru's contribution on the idea of economic development.

- o 0 o -

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com